

திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி மாநகர கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் ஆவடியை அடுத்த திருமுல்லைவாயிலில் கிழக்கு பகுதிச் செயலாளர் பேபிசேகர் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் அரசின் சாதனைகளை விளக்கி பேசினார். அருகில் சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, பேச்சாளர் கதீர் மீனாட்சி சுந்தரம், ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், மாநகர பொறுப்பாளர் சன்.பிரகாஷ், மண்டல குழு தலைவர் அமுதா பேபி சேகர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாவட்ட நிர்வாகிகள் ம.ராஜி, சி.ஜெ.சீனிவாசன், காயத்திரிஸ்ரீதர், எஸ்.ஜெயபாலன், ஆவடி பகுதி செயலாளர்கள் ஜி.ராஜேந்திரன், ஜி.நாராயணபிரசாத், ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ், அவைத் தலைவர் கா.மு.ஜான், தீனதயாளன், பிரதிநிதி ராஜ்குமார், வட்டச் செயலாளர் பாண்டியன், கவுன்சிலர் விமல் உள்பட பலர் உள்ளனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (09.05.2023) சென்னை, மயிலாப்பூர், திருவள்ளுவர் திருக்கோயிலில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள திருப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். உடன் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா ராஜன், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், உயர்மட்ட ஆலோசனைக் குழு உறுப்பினர் திருமதி தேச மங்கையர்க்கரசி, சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி கி.ரேணுகாதேவி மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

பிளஸ் 2 பொதுத் தேர்வில் சாதனை படைத்த மாணவி நந்தினியின்

# உயர்கல்விக்கு அரசு அனைத்து உதவிகளையும் செய்யும்!

## மாணவியைப் பாராட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, மே 11-**

**பிளஸ் 2 பொதுத் தேல்வில் சாதனை படைத்த திண்டுக்கல் மாணவி நந்தினியை நேரில் அழைத்துப் பாராட்டிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நந்தினியின் உயர்கல்விக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் அரசு செய்யும் என்று உறுதி அளித்துள்ளார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

“கல்விதான் யாராலும் திருட முடியாத சொத்து” என்று பல நிகழ்ச்சிகளிலும் நான் கூறி வருகிறேன். மே 8 அன்று வெளியான +2 பொதுத்தேர்வு முடிவில் 600/600 பெற்றுச் சாதனை படைத்துள்ள மாணவி நந்தினியும் “படிப்புதான் சொத்து என்று நினைத்துப் படித்தேன்” எனப் பேட்டியில் கூறியதைக் கண்டு பெருமையடைந்தேன். அவரை இன்று நேரிலும் அழைத்து வாழ்த்தினேன்.

அவரது உயர்கல்விக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் நமது அரசே செய்து தரும் என்ற உறுதியையும் வழங்கியுள்ளேன்.

எளிய குடும்பப் பின்னணி கொண்ட நந்தினி போன்றோர் தங்கள் உழைப்பால் அடையும் உயரங்கள்தான் நம் தமிழ்நாட்டின் அடையாளம்!

“அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும் உள்ளழிக்க லாகா அரண்”

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

நீர்நிலைகளை பாதுகாப்புடன் பயன்படுத்த

# பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, மே 11-

கோடைகாலம் என்பதால் நீர்நிலைகளை பயன்படுத்துவோர் பாதுகாப்புடன் இருக்க அவர்களுக்கு விழிப்புணர்வினை துறை சார்ந்த அதிகாரிகள் ஏற்படுத்திட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், திருத்தணியில் நீரில் மூழ்கி உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்து தலா ரூபாய் 2 லட்சம் நிதியையும் அளித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணியிலுள்ள உறவினர் இல்லத்திற்குச் சென்றிருந்த திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி தாலுகா, போளூர், பார்வதி அகரம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி.மல்லிகா, த/பெ.நரசிம்மன் (வயது 65), செல்வி. ஹேமலதா. த/பெ.விநாயகம் (வயது 16) மற்றும் செல்வி. கோமதி, த/பெ. மாரிமுத்து ஆகியோர் நேற்று முன்தினம் (9.5.2023) காலை திருத்தணியிலுள்ள பழைய கைவிடப்பட்ட கல்குவாரி குட்டை நீரில் எதிர்பாராத விதமாக தவறி விழுந்ததில் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினை கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

**உயிரிழந்தோர் குடும்பத்திற்கு தலா ரூ.2 லட்சம்!**

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் மற்றும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

தற்போது கோடை காலமாகையால் பொதுமக்கள் குறிப்பாக சிறுவர், சிறுமியர் மற்றும் சுற்றுலாப் பயணிகள் குளங்கள், ஏரிகள், அருவி மற்றும் ஆறுகள் போன்ற நீர்நிலைகளில் குளிக்கச் செல்கின்றனர். அவ்வாறு குளிக்கும் போது எதிர்பாராத விதமாக தவறி நீரில் மூழ்கி உயிரிழக்கும் துன்ப நிகழ்வுகள் அடிக்கடி நடந்து வருகின்றன. இந்நிகழ்வுகள் நம் அனைவருக்கும் மிகுந்த மனவேதனையை அளிப்பதோடு பல குடும்பங்களை தீரா துயரிலும் ஆழ்த்தி விடுகின்றன.


இதனைத் தவிர்க்கும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள நீர்நிலைகளை போதுமான பாதுகாப்புடன் பயன்படுத்த வேண்டுமென்ற விழிப்புணர்வினை பொதுமக்களிடையே தீயணைப்புத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள், தன்னார்வலர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் ஏற்படுத்தவேண்டும் எனவும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும் போதிய கவனம் செலுத்தி பொதுமக்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் இத்தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### செ. கந்தப்பன்

### மே 11 (1990)



**கழக கொள்கை விளக்க அணிச் செயலாளராகவும், இருமுறை நாடாளுமன்ற உறுப்பினராகவும், ஒரு முறை சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர். இவர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவராக ஐந்தாண்டு காலம் பணியாற்றியபோதுதான் கிராமங்கள்தோறும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கட்டப்பட்டன.**

**1965ஆம் ஆண்டு நடைபெற்ற மொழிப்போரில் பங்கேற்று சிறை சென்றார். மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறையில் இருந்தவர்.**

**“ஆழ்ந்த அரசியல் ஞானமும், அப்பழுக்கற்ற கொள்கை உறுதியும், கழகம் காப்பதில் கடமை உணர்வும் என்னை “அண்ணே” என்று அழைக்கும்போது ஒரு வற்றாத பாசமும் – கந்தப்பனை நமது கழகத்துக்கு அடையாளம் காட்டும் அழியாத சான்றுகளாகும்” என தலைவர் கலைஞர் குறிப்பிட்டு போற்றியுள்ளார்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில்

# அனைத்துப் பணிகளும் விரைவில் தொடங்கப்படும்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, மே 11-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 2023-24ஆம் நிதியாண்டின் அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (9.5.2023) சென்னை, அண்ணாநகர் மேற்கு, 100 அடி பிரதான சாலையில், ரூ.15 கோடி மதிப்பீட்டில் நகரும் மின்படிக்கட்டுகளு டன் நடை மேம்பாலம் அமைக்கப்படுவது தொடர்பாகவும், சென்னை, ஷெனாய் நகரில், 4.5 ஏக்கரில் உள்ள மாநகராட்சி விளையாட்டு மைதானத்தை, ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துவது தொடர்பாகவும், சென்னை, கோடம்பாக்கத்தில் உள்ள 1.5 கி.மீ. நீளமுள்ள புலியூர் கால்வாய் கரைகளை ரூ.5 கோடி மதிப்பீட்டில் அழகுப்படுத்துவது தொடர்பாகவும் ஆகிய இடங்களுக்கு நேரடியாக சென்று களஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், அமைச்சர் பி. கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 2023-24 நிதியாண்டிற்கான அறிவிப்புகளில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு 50 அறிவிப்புகள் அறிவிக்கப்பட்டது.

இதில் சென்னைப் பெருநகர பகுதியிலுள்ள 26 சட்டமன்ற தொகுதிகளின் மேம்பாட்டிற்கான 34 அறிவிப்புகளை துரிதமாக செயல்படுத்தும் வகையில், நேற்று முன்தினம் (9.5.2023) சென்னை, அண்ணாநகர் மேற்கு 100 அடி பிரதான சாலை வி.ஆர்.மால் அருகில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் நகரும் மின்படிக்கட்டுகளுடன் நடைமேம்பாலம் அமைக்கப்படும். சென்னை, ஷெனாய் நகரில், 4.5 ஏக்கரில் உள்ள மாநகராட்சி விளையாட்டு மைதானத்தை, ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். அதேபோல சென்னை, கோடம்பாக்கத்தில் புலியூர் கெனால் என்று அழைக்கப்படுகின்ற 1.5 கிலோமீட்டர் நீளத்தில் இருக்கின்ற கால்வாயை ரூ.5 கோடி மதிப்பீட்டில் முழுமையாக தூர்வாரி மழைக்காலங்களில் இந்த பகுதிகளில் வெள்ள சேதாரம் எதுவும் ஏற்படாமல் பராமரித்து, பாதுகாப்பதற்குண்டான பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

2023-24 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் சென்னை தீவுத்திடலில் சுற்றுலா பொருட்காட்சி மற்றும் கிழக்கு கடற்கரை சாலையிலே 5 கிலோ மீட்டர் நீளத்திற்கு மிதிவண்டி பாதை அதேபோன்று கடற்கரையை தூய்மைப்படுத்துகின்ற பணிகளும் அறிவிக்கப்பட்டிருந்தது. ஒட்டு மொத்த அறிவிப்புகளையும் களத்திற்குச் சென்று ஆய்வு செய்ய வேண்டுமென்று முதல்வர் அவர்களின் உத்தரவிற்கிணங்க தொடர்ந்து இன்றைய தினத்தோடு 14 சட்டமன்ற தொகுதிகளில் 19 இடங்களில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதமுள்ள 15 இடங்களிலும் வெகு விரைவில் கள ஆய்வு மேற்கொண்டு, இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக பணிகளை தொடங்கி, வேகமாக முன்னெடுக்கும் காரியத்தில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் சென்னையிலே பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், மாநகர போக்குவரத்துக் கழகம் இப்படி பல்வேறு அமைப்புகள் இருந்தாலும் குறிப்பாக சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு மூன்று ஆண்டுகளில் 1000 கோடி ரூபாய் அளவிற்கு வடசென்னைப் பகுதியை மேம்படுத்த தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிட்டு அந்த எண்ணங்களுக்கு வடிவம் தேடித் தர சொல்லியிருக்கின்றார். அந்த வகையில் சென்னைப் பெருநகரத்தினுடைய அளப்பரியாப் பணியில் முதல்வர் அவர்களுடைய எண்ணங்களுக்கு வலு சேர்க்கின்ற வகையில் தினந்தோறும் ஒரு பகுதியில் கள ஆய்வு செய்து, அப்பணிகளை ஒருங்கிணைத்து செயலாற்றும் வகையில் ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தி, இந்த மேம்பாட்டுப் பணிகளை துரிதப்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு தற்போது விளையாட்டுத் துறையில் ஏற்படுத்தி வருகின்ற மாற்றங்கள் விளையாட்டுத் துறைக்காக அமைக்கப்பட இருக்கின்ற கட்டமைப்புகள், அதே போன்று விளையாட்டுத்துறை சார்பில் மேற்கொள்ளப்பட இருக்கின்ற திட்டங்களுக்காக அனுதினமும் பணியாற்றிக்கொண்டிருக்கும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமுயற்சியை மேற்கொண்டிருக்கின்றார். இதனுடைய பலன், வருகின்ற காலங்களில் ஒன்றிய அளவிலேயே விளையாட்டுத் துறையில் சிறந்த மாநிலமாக தமிழ்நாடு விளங்கும் என்கின்ற சூழ்நிலையை உருவாக்குவதற்கான கட்டமைப்புகள் மேம்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின்போது பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர். பிரியா, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, சட்டமன்ற உறுப்பினர்கள் (வில்லிவாக்கம்) அ.வெற்றியழகன், (அண்ணா நகர்) எம். கே.மோகன், (ஆயிரம் விளக்கு) டாக்டர்.நா.எழிலன், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.சு.அமிர்தஜோதி, , பெருநகர சென்னை மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் ஷேக் அப்துல் ரஹ்மான்,, மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மாநகராட்சி மண்டலக் குழுத்தலைவர்கள் கூ.பீ. ஜெயின், கிருஷ்ணமூர்த்தி, சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் பெரியசாமி, ருத்ரமூர்த்தி, பாலசுப்ரமணியன், மாநகராட்சி மண்டல அலுவலர்கள், நெடுஞ்சாலைத் துறை, சென்னை மெட்ரோ ரயில் மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்!

# கொரோனா தொற்று முடிந்துவிடவில்லை!

## உலக சுகாதார அமைப்பு தகவல்!

ஜெனீவா, மே 11 -

கொரோனா பெருந்தொற்று முடிவுக்கு வந்துவிட்டதாக உலக சுகாதார அமைப்பு (டபிள்யூ.எச்.ஓ.) அறிவித்துள்ளது. உண்மையிலேயே பெருந்தொற்று ஓய்ந்துவிட்டதா?

கொரோனா பெருந்தோற்று முழுமையாக முடிவுக்கு வந்துவிட்டதாகக் கூறமுடியாது. சர்வதேச அளவிலான பொது சுகாதார அவசர நிலையை மட்டுமே டபிள்யூ.எச்.ஓ. நீக்கியிருக்கிறது. இதன்படி கொரோனா அபாய நிலை முடிவுக்கு வந்துவிட்டது என்று மட்டுமே கூறலாம்.

கொரோனா அச்சுறுத்தல் இன்னமும் நீடிக்கி றது என்று டபிள்யூ.எச்.ஓ. இயக்குநரே எச்சரித்திருக்கிறார். இதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன.

கொரோனா வைரஸின் மரபணு மாற்றம் கணிக்க முடியாததாக இருக்கிறது. இனிவரும் காலங்களில் அதி வேகமாக பரவக்கூடிய வீரியமான கொரோனா வைரஸ் உருவாக வாய்ப்பு இருக்கிறது.

ஏதாவது ஒரு நாட்டில் வீரியமான கொரோனா வைரஸ் பரவுவது கண்டறியப்பட்டால் டபிள்யூ. எச்.ஓ. மீண்டும் பொது சுகாதார அவசர நிலையை அறிவிக்கும். கொரோனா பெருந்தொற்று முழுமையாக ஓயவில்லை. நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இன்புளுயன்ஸா வைரஸ் தொற்றில் இருந்து தற்காத்து கொள்ள ஆண்டுதோறும் தடுப்பூசியை செலுத்திக் கொள்கிறோம். இந்த தடுப்பூசியின் மருந்துகளிலும் மாற்றம் செய்யப்பட்டு வருகிறது. கொரோனா தடுப்பூசி காரணமாக அந்த வைரஸை எதிர்க்கும் சக்திநமக்கு கிடைத்திருக்கிறது.

இந்த எதிர்ப்பு சக்தி குறையக்கூடும். இன்புளுயன்ஸா தடுப்பூசி போன்று கொரோனாவுக்கும் தொடர்ச்சியாக தடுப்பூசி செலுத்தி கொள்ள வேண்டுமா என்பது குறித்தும் சிந்திக்க வேண்டும்.

இப்போதைய நிலையில் பெரும்பாலான நாடுகளில் இரு தவணை தடுப்பூசியும், ஒரு பூஸ்டர் தடுப்பூசியும் போடப்பட்டு இருக்கிறது. இந்த தடுப்பூசி திட்டமே பெரும்பாலான நாடுகளில் இன்னும் முழுமை அடையவில்லை. இந்தியாவில்கூட 20% பேர் மட்டுமே பூஸ்டர் தடுப்பூசியை செலுத்தி உள்ளனர்.

இவ்வாறு உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.


**பெருநகர சென்னை மாநகராட்சி**

**இயந்திர பொறியியல் துறை**

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள மேற்பார்வை பொறியாளர் (SWD/Mech) அவர்களால் மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது

இ.பொ.து.ந.க.எண்.எம்1/0887/2023

பொது மக்களுக்கு இடையூறாக சாலைகளில் சுற்றித்திரியும் கால்நடைகளை பிடிக்க 5 எண்ணிக்கையில் மாடு பிடிக்கும் வாகனங்கள் கொள்முதல் செய்யும் பணி

முன்வைப்பு தொகை : ஒப்ப படிவத்தில் தெரிவித்துள்ளபடி

ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் : 30.05.2023 பிற்பகல் 3.00, மணி

ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : 31.05.2023 பிற்பகல் 3.30 மணி

மேலும் விவரங்களுக்கு : http://tntenders.gov.in இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 2504 / ஒப்பந்தப்புள்ளி / 2023 — மேற்பார்வை பொறியாளர் (இ/ம.நீ.வ.)

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

**பெருநகர சென்னை மாநகராட்சி**

**இயந்திர பொறியியல் துறை**

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள மேற்பார்வை பொறியாளர் (SWD/Mech) அவர்களால் மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது

இ.பொ.து.ந.க.எண்.எம்1/0937/2023

பொது மக்களுக்கு இடையூறாக தெருக்களில் சுற்றித்திரியும் நாய்களை பிடிக்க 6 எண்ணிக்கையில் நாய் பிடிக்கும் வாகனங்கள் கொள்முதல் செய்யும் பணி

முன்வைப்பு தொகை : ஒப்ப படிவத்தில் தெரிவித்துள்ளபடி

ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் : 30.05.2023 பிற்பகல் 3.00, மணி

ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : 31.05.2023 பிற்பகல் 3.30 மணி

மேலும் விவரங்களுக்கு : http://tntenders.gov.in இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 2503 / ஒப்பந்தப்புள்ளி / 2023 — மேற்பார்வை பொறியாளர் (இ/ம.நீ.வ.)

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்




திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதிக்குட்பட்ட இரா.கி.பேட்டை வட்டார அலுவலகத்தில் 35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் டிராக்டர் மின்கல வாகனங்களை பயன்பாட்டிற்கு திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தொடங்கி வைத்தார். இதில் ஒன்றியச் செயலாளர்கள் சி.என்.சண்முகம், பெ.பழனி, கே.எம்.சுப்பிரமணியம், ஒன்றியக் குழு தலைவர் ரஞ்சிதா, துணை தலைவர் திலகவதி ரமேஷ் உள்பட பலர் உள்ளனர்.